செ.வெ.எண்: 55 நாள்: 20.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மறுவாழ்வு சிகிச்சைக்கு பின் அவர்களது குடும்பத்தாரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் ஒப்படைத்தார்

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மறுவாழ்வு சிகிச்சைக்கு பின் அவர்களது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மறுவாழ்வு சிகிச்சைக்கு பின் அவர்களது குடும்பத்தாரிடம் ஒப்படைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு சிகிச்சை அளிப்பதற்காக தமிழக அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் மாவட்டம் தோறும் துவக்கப்பட்டு மனநலம் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு மறுவாழ்வு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் அரசு மருத்துவமனையில் வேர்டு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லம் தமிழக அரசு நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. இந்த இல்லமானது கடந்த ஓராண்டுக்கு மேலாக நமது மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்த இல்லத்தில் சென்ற ஆண்டு குடும்பத்தாரால் கைவிடப்பட்ட நிலையில் மனநல பாதிப்பின் காரணமாக ஆங்காங்கே சுற்றித்திரிபவர்களை மீட்டு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லத்தில் சேர்க்கும் திட்டமான மீட்பு திட்டத்தில் நமது மாவட்டத்தில் மீட்பு திட்டத்தை செயல்படுத்தும் சீடு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் புதுக்கோட்டை காந்திநகரைச் சேர்ந்த திரு.முருகன், மிரட்டுநிலை பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த திரு.பரகத், நாகப்பட்டிணம் மாவட்டம், பறவை வட்டம், வல்லாக்குளத்தைச் சார்ந்த திருமதி.வீரம்மாள், அறந்தாங்கி, தெற்கு மேல்மங்கலத்தைச் சார்ந்த திருமதி.சாந்தி ஆகியோரை மீட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டுவரும் வேர்டு தொண்டு நிறுவனத்தின் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மையத்தில் கடந்த ஜனவரி 2016ல் சேர்க்கப்பட்டு அவருக்கு ஒரு வருட காலமாக மனநல மருத்துவர் திருமதி.ஜோ.ராதிகா அவர்களின் ஆலோசணை மற்றும் கண்காணிப்பில் தொடர் மறுவாழ்வு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதன் பயனாக மேற்குறிப்பிட்டுள்ள 4 நபர்களும் மனநல பாதிப்பில் இருந்து விடுபட்டு அவர்கள் சாதாரண நிலையை அடைந்து அவர்களது வீட்டு முகவரிகளை தெரிவித்ததன் அடிப்படையில் அவர்களுடைய குடும்பத்தாரை நேரில் வரவழைத்து அவர்களிடம் 4 நபர்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்களை சிறப்பாக பராமரித்து பாதுகாக்க குடும்பத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப. அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.இராமசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், திரு.பூ.சரவணகுமார், மனநல மருத்துவர் திருமதி.ஜோ.ராதிகா, வேர்டு தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு.ஆர்.கே.தாஸ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.கோ.வசந்த ராம்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**